உ

பொங்கும் மங்கலம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார். அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி உ.	நளஹு பங்குனி 1917ஹு மார்ச்சுமீ	பகுதி உ.

புதல்வர் கடமை.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

தாய்தந்தையர்பால் மரியாதையின்றி நடப்போர், "ஏன்பிறந்தார் புவிச் சுமையாய் இருக்கும் இன்னோர்?" என்று அறிஞர்களால் இரங்கிக் கூறத் தக்கவர்கள் என்பது, இதுவரை கூறியவிஷயங்களால் யாவருக்கும் தெரிய வந்திருக்கும். நிற்க.

கீழ்ப்படிவும் மரியாதையும் மட்டும், பெற்றோரை மகிழ்வுறுத்துமென எண்ணற்க. கேவலம் அடிமையிடத்தும இவ்விரண்டும் இருக்கக் காண்கின்றோம். ஆதலின், இவ்விரண்டினுக்கும் மேலானதும், இவ்விரு செய்கைக்கும் மூல காரணமாக அமைய வேண்டியதுமான மற்றொன்றும் இருத்தல் அவசியம். இதுவே அன்புடைமை எனப்படும்.

'அன்புடைமை', பெற்றோர்களைப் போற்றும் மூன்றாவது வழியாகக் கூறப்படினும், முதன்மையாகக் கொண்டு தீரவேண்டிய தொன்றாகும். இவ்வன்பிற்கு மூன்று லக்ஷணங்களுண்டு. இம்மூன்று லக்ஷணங்களும் பூர்த்தியாக இருந்தாலொழிய அன்பும் பூர்த்தியானதாக மாட்டாது. அன்பின முதலாவது லக்ஷணம் யாதெனில், "கைம்மாறு கருதாமை"யேயாம். தன்னய நாட்டத்தால் உண்டாகும் அன்பு, மெய்யன்பு ஆகாது. ஏனெனில், ஒன்றைப் பெற்றோரிடமிருந்து பெறும் பொருட்டு அவர்கள் மீது அன்பு பாராட்டும் மக்கள், அப் பொருளைக் கவர்தற்கு ஒரு வழியாக அவ் அன்பைக் கருதுகின்றனரேயன்றி மற்றன்று. வினைவேறுபட்ட இன்னோர்,

மனம் வேறு, சொல் வேறு, மன்னுதொழில் வேறு உடையாராய், அவரை வஞ்சித்து, அதனால் தங்களுக்கே கேடு தேடிக் கொள்ளக் கூடும். ஏனெனில், இவர்கள் தம் அந்தரங்கக் கருத்துக்கள் நிறைவேறு மட்டுமே, பெற்றோர்க்கு நல்லோர் போன்று நடிப்பர். ஆதலால், லாபமோ நஷ்டமோ, வெற்றியோ தோல்வியோ, மதிப்போ அவமதிப்போ, இவற்றில் எவை வரினும் வருக' என்று அன்பின் பொருட்டே அன்பு வைப்போரே உத்தமர்.

சகோதர சகோதரிகளே! இங்ஙனம் நாம் கூறும்போது, ''நல்லது ஐய! 'சொல்லுதல் யார்க்கும் எளிய; அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்', என்பதைச் சற்று யோசித்துப் பேசுங்கள். கைம்மாறு கருதாது அன்பின் பொருட்டே அன்பு பாராட்டல் யாரால் இயலும்?'' என உங்களிற் சிலர் நம்மைக் கேட்கலாம். அங்ஙனம் கேட்போர்க்கு நாம் கூறும் விடை இதுவே:

இவ்வுலகின்கண் உள்ள ஜடப் பொருள்களைச் சிறிது நீங்கள் ஊன்றி நோக்கி, நிதானித்து யோசித்துப் பார்ப்பீர்களாயின், அவை சுயநயம் கருதி ஏதும் செய்திருக்கக் காண மாட்டீர்கள். மனோ ரம்மியமான எத்துணையோ காட்சிகளைக் கண்டு களித்திருப்பீர்களே! கைம்மாறேதேனும் நீங்கள் கண்டு மகிழ்ந்த எதுவேனும் தரும் என்று எதிர் பார்த்தா அங்ஙனம் செய்தீர்கள்? அல்லது அக் காட்சிப் பொருள்களேனும் உங்களிடமிருந்து எக் கைம்மாறேனும் எதிர்பார்த்ததோ? இரண்டும் இல்லையே.

''கைம்மாறு வேண்டா கடப்பாடு; மாரிமாட்(டு)
என்ஆற்றுங் கொல்லோ உலகு?''

என்பதன் விரிந்த கருத்தையும், உப-லக்ஷணத்தாற் கொள்ளத்தக்க பிறவற்றின் இயல்பையும் சிறிது சிந்தித்துப் பாருங்கள்.!

கதிரவன் புவிநிறை காரிருள் நீக்கலென்?
மரம் செடி கொடிகளும் மலர்களும் மன்னுயிர்க்(கு)
உரியகா லங்களில் உறுபயன் ஈவதென்?
மாங்குயில் முதலிய தீங்குரற் பறவைகள்
நம்செவிக் கின்பம் நல்குவ தேனோ!
மண், நீர், தீ, வளி, வான்என் றோதும்
ஐம்பூ தமும் நலன் ஆற்றுவ தெனனோ?

என்ன பிரதி உபகாரம் எதிர்பார்த்து இவை உலகுக்குத் தம்மால் இயலுதவி செய்கின்றன?

கடமையின் பொருட்டே தமது கடமையைச் செய்து வரும் இவற்றை யெல்லாம் காணுந்தோறும், ஆறறிவு படைத்த மக்களுக்கு, ''பெற்றோரிடத் தன்பு'' என்னும் பெருங்கடமையைக் கைம்மாறு கருதாது மேற்கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி உண்டா

காமற் போய்விடுமா? நீங்களே சொல்லுங்கள். தன்னயமே பாராட்டும் பிசாசு அன்றோ இவ்வுணர்ச்சி உதிக்க வொட்டாமற் செய்து விடுகின்றது?.

'பெற்றோரிடத்து மெய்யன்பு பூண்ட பிள்ளைகள் தன்னயந் தவிர்ந்து, அவர்களுக்கு மகிழ்வும் நலனும் தரத்தக்கவைகளையே தமக்கு மகிழ்வும் நலனும் தரத்தக்கவைகளாகக் கொண்டு ஒழுகுவர்' என்பதற்கு யாரினும் சிறந்த பூரு என்பவனே சான்றாவன். அவனது வரலாற்றுச் சுருக்கம் வருமாறு:—

சந்திர வம்சத்து அரசனும், நகுஷ குமாரர்களில் ஒருவனுமான யயாதிக்குத் தெய்வயானை, சன்மிஷ்டை என இரு மனைவியர் உண்டு. இவர்களில் தெய்வயானை சுக்ராசாரியின் மகள்; சன்மிஷ்டை, தானவர் தலைவனான விருஷபர்வனது மகள். இவர்கள் இருவரையும் மணப்பதன்முன், சன்மிஷ்டை தெய்வயானைக்கு இழைத்த ஓர் தீங்கின் நிமித்தம், சுக்கிராசாரி சினந்து, யயாதியை நோக்கி, "சன்மிஷ்டையைத் தெய்வயானையைப் போலவே எல்லா சுகங்களும் நீ பெறச் செய்யலாம். ஆயினும் சயன விஷயத்தில் மட்டும் அவளை விலக்கி வைக்க வேண்டியது." என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டிருந்தான். இதற்கு இணங்கியே அவளை மணந்தும், ஒருநாள் யயாதி விதிவசத்தால் அவளைச் சேர்ந்தான். சேரவே,

சாரும் அன்பினிற் கற்பினிற் சிறந்தசன் மிஷ்டை
சேரும் மைந்தினும் உயர்வினும் தேசினும் சிறந்து
மேருவென்றிட மேதினி யாவையும் தரிப்பான்
'பூருவென்றொரு புண்ணியப் புதல்வனைப் பயந்தாள்.

யயாதிக்குச் சன்மிஷ்டையிடம் பின்னும் இரண்டு புத்திரர்கள் தோன்றினர். இச்சமாசாரம், யது, துர்வசு என்ற இரு மக்களையும் ஈன்ற தெய்வயானைக்கு எட்டவே, அவள் இது பொறாது, நிகழ்ந்தவற்றைத் தன் தந்தையிடம் கூறினள். கூறலும், தன்னை அவமதித்ததன் நிமித்தம் சுக்கிராசாரி வெகுண்டு, யயாதியை நோக்கி, "உன் யௌவன கர்வமே இதற்கெல்லாம் காரணம். ஆதலின் நீ உடனே விருத்தனாகுக" எனச் சபித்தனன். சபித்த உடனே யயாதிக்கு விருத்தாப்பியம் வந்து விட்டது. அவன் தொண்டு கிழவனாகி மிகவருந்தித் தன் பிழை பொறுத்தருளுமாறு தன் மாமனை வேண்ட, அவன் யயாதிக்கு இரங்கியும், தன் மகள் தெய்வயானையின் சுகம் கருதியும், அவனை நோக்கி, "இக்கிழத்தனம் உனக்கு இருந்தே தீரும். ஆயினும் அதை நீ ஒரு வாலிபனிடம் கொடுத்து, அவனது வாலிபத்தை மாற்றிக் கொள்ளும் சக்தி உனக்கு யான் அநுக்கிரகிக்கிறேன். இப்பொழுதே ஒரு காரியம் செய்: நின் புதல்வருள் ஒருவனுக்கு உன் முதுமையை ஈந்து அவனது இளமையைப் பெறுக. இங்ஙனம் தர இயைந்த புதல்வனுக்கே உன் அரசை அளிப்பாயாக"

என்று கூறிச் சென்றான். உடனே யயாதி தன் மக்கள் ஐவரையும் வரவழைத்துத் தன் பரிதாப நிலையைக் கூறி "அருமை மக்காள்! வலிமை தளர்ந்து, வேர் அறப்பெற்ற ஆலமரம், அசைந்து கீழே விழுகிறதென்று அறிந்து, அம்மரத்தினின்றும் முன்னமே வந்து இறங்கியுள்ள விழுது, தான் தூணாக நின்று அம்மரத்தைத் தாங்கி, அது விழாதபடி அதற்கு உறுதி உண்டாக்குவதை நீங்கள் கண்டிருப்பீர்களே! அது போல, புத்திரர்களாகிய நீங்கள் உங்கட்குள்ள நல்லறிவால் மகிழ்ச்சியுடன் ஒற்றுமைப்பட்டு, தந்தையாகிய என்னைத் தளர்ச்சி அடையாதபடி உங்கள் அன்பான உதவியினால் நிலைநிறுத்திப் புகழும் புண்ணியமும் பெறுவீர்களாக. உங்களில் யாருக்கு என் வயோதிகம் பெறவும், தன் வாலிபம் தரவும் விருப்பம்?" என்று கேட்டான். அதற்கு அநேகமாய் எல்லவரும் ஒருவனைப் போலவே, "தந்தாய்! உங்கள் கேள்வி மிக்க வியப்பைத் தருகிறது. மனிதனாயுளிற் சிறந்தது இளமையே என்றுணர்ந்தும், எம்மூடனேனும் இளமையை ஈந்து முதுமை பெற விரும்புவானோ? ஒருமுறை கழிந்த இளமை நீர் எவ்வளவு உறுதி கூறினும் திரும்பவும் வருமென்று நாங்கள் நம்பவில்லை. ஆகலின் நாங்கள் உங்கள் விருப்பிற்கிணங்க முடியாமைக்கு விசனிக்கிறோம்" என்றனர். ஆயினும் பூரு ஒருவனே மனமகிழ்வுடன் தந்தை கூறியதற்கு உடன்பட்டு முதுமையுற்றான். யயாதி ஆநந்தமும் ஆச்சரியமும் அன்பும் மேலிட்டவனாய், தன்மகனை வியந்து, சிலகாலம் செங்கோல் செலுத்தியும் தன் மனைவியருடன் சுகமாகக் காலங்கழித்தும் வந்தான். தனது எண்ணம் யாவும் நிறைவேறியவுடன், அவனுக்கு ஆறுதலும் திருப்தியும் உண்டாகித் தவத்தின்மேல் நாட்டம் உற்றது. உறவே அவன், தன்சொற் கடவாத தநயனை விளித்து, அவனுக்குரிய இளமையை ஈந்து தனது முதுமையைப் பூருவிடமிருந்து முழுமனதுடனும் ஏற்றான். பின்பு, தன் பெறலரும் புதல்வனை மார்புறத் தழுவி, உச்சி மோந்து, அவனை நோக்கி, "தன்னயம் கருதாத் தகைமையோய்! வாழி! நீ செய்த செயற்கருஞ் செய்கைகளுக்கு யான் இயற்றவல்ல கைம்மாறு யாதோ? அறிகிலேன். அறிவறிந்த மகப்பேறால் எய்தும் பயன் இம்மையிலே நின்னாற் பெற்றேன். எனது அரசாட்சியை நீயே ஏற்றுக்கொள். சுக்ராசாரியின் கட்டளையும் இதுவே. பூத உடம்பு பொன்றினும் உன் புகழுடம்பு "இரவியும் மதியுமுள்ள எல்லையில காலம் வாழும்" என்று ஆசீர்வதித்து, அவனுக்குப் பட்டம் கட்டித் தவம் செய்யச் சென்றான்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

☞ சொற்பப் பிரதிகளே உள — விவேகோதயம் முதல் தொகுதி: விலை ரூ 2-12-0. பெண்பாலர்க்கும் மாணவர்க்கும் மட்டும் ரூ 2.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

சாணக்கிய ஸாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

இரண்டாம் பாகம்.

முதலாவது அத்தியாயம்.

பாகுராயணன் ஸர்வார்த்தஸித்தியைத் தேற்றுதல்

சாணக்கியன் தனது சபதத்தை நிறைவேற்றியதும், சந்திரகுப்தனுடன் கங்காநதியில் ஸ்நானம் செய்து, அவிழ்ந்து கிடக்கும் தனது சிகையை முடிந்து கொண்டு, தன் விடுதி வந்து சேர்ந்தான். இவ்விஷயத்தையும், 'சத்துருக்களின் கபடத்தினால் நந்தர்கள் ஒன்பது பேர்களும் மாண்டுவிட்டார்கள்' என்பதையும் பற்றிப் பாடலீபுரத்திலுள்ள ஜனங்கள் எல்லோரும், வியப்புடனும் விசனத்துடனும் பேசிக் கொண்டார்கள். இவ் வதி துக்ககரமான சமாசாரத்தைப் பெரிய அரசனான ஸர்வார்த்தஸித்தியினிடம் தெரிவிக்க எவருமே துணியவில்லை. ஆயினும், வாயில் காவலர்களும் மெய்காப்பாளரும் இதனைக் குறித்து அதி ரகஸ்யமாகப் பேசிக்கொண்ட விஷயம், எவ்வாறோ அரசன் செவிக் கெட்டியது. உடனே அக் கிழவரசன், திடீரென்று பூமியில் விழுந்து, மூர்ச்சை படைந்தான். இது கண்டு சுநந்தை முதலிய அந்தப்புரத்திலுள்ள ராஜஸ்திரீகள் எல்லோரும் கதறியழும் ஓசை பட்டணத்தை அதிரச் செய்துவிடும்போல் இருந்தது.

அப்பொழுது கோட்டை மதிலின் மீது சுற்றிவந்து கொண்டிருந்த சேநாதிபதியான பாகுராயணன் இவ் வோசையைக் கேட்டு "இஃதென்ன"? என்று விசாரித்தான். "'நவநந்தர்களும் சத்துருக்களால் ஒரே சமயத்தில் கொல்லப்பட்டார்கள்' என்றறிந்த அந்தப்புரத்திலுள்ள ராஜ ஸ்திரீகள் கதறுகிறார்கள்" என்று அறிந்ததும், "ஆஹா! என்ன ஆச்சரியம்! என்ன ஸாஹஸம்! ஐயோ! 'சுத்த க்ஷத்திரிய வம்சம் இனி இருக்கக் கூடாது' என்பது தெய்வ சங்கற்பமாகில், மனித ப்ரயத்னத்தால் அதை நிவர்த்திக்க முடியுமோ? இச்சமயம் விருத்த தம்பதிகளுக்குச் சமாதானம் சொல்லக்

கூடிய தக்கோர் ஒருவரும் இல்லையே! புத்திர சோகத்தால் அவர்கள் உயிர் விடாதபடி, நான் உடனே சென்று அரசனது மனத்தைத் தேற்றி ஸமாதானம் செய்தலே முக்கியம்" என்று கோட்டையை விட்டுக் கீழ் இறங்கி ராஜக்கிருக வாயில் அருகில் வந்தான். அங்கு, நந்த பத்தினிகளால், பலகணி வழியாகக் கழற்றி எறியப்பட்ட புஷ்பமாலைகளும், ஆபரண வகைகளும் தெருவில் சிதறிக் கிடந்தன. அம்மாதர்களின் கண்களிலிருந்து பெருகி வழியும் கண்ணீர்ப் பிரவாகமானது, அவர்களுடைய கண்களில் இடப்பட்ட மை கரைந்து வருவதால் கறுத்து, "காளிந்தி" நதியே போல் அலைமோதி ஓடும்போது, ஆங்கு சிதறிக் கிடந்த புஷ்பமாலைகளையும் ஆபரணங்களையும் இழுத்துச் சென்றது.

பாகுராயணன் இதைத் தாண்டி, உள்ளே சென்று, பீடத்திலிருந்து மூர்ச்சசை யற்றுக் கீழ்விழுந் திருக்கும் அரசனைக் குளிர்ந்த ஜலத்தாலும் விசிறியின் காற்றாலும பிரக்ஞை வரும்படி செய்து, "மகாப் பிரபுவே! தங்களுக்கு இவ்வித புத்திர சோகத்தை ஏற்படுத்திய காலத்தின் கோலத்தை என்னென்று சொல்வது? ஐயோ! ஸஹிக்க முடியவில்லையே! தங்களுக்குத தெரியாத விஷயம் இல்லை. சத்துருக்கள் மத்தியில் அநாதர்களாக ராஜ ஸ்திரீகள் இப்பொழுது இருக்கின்றனர். அவர்களுக்குத் தங்களை யன்றி வேறு ரக்ஷகர் கிடையாதாகையால், எப்படியாகிலும் மனதைத் தேற்றிக் கொண்டு இருக்க வேண்டும்" என்று சமயோசித மாகவும, துக்கம் ஸமாதானம அடையும்படிக்கும, சிற்சில வார்த்தைகளைச் சொல்லி விட்டு, 'நகர வாசலுக்கு அருகில் சத்துருக்கள் நெருங்கி வந்து விட்டது' என்று, அங்குவிட்டு, மிகு அவஸரமாகத் திரும்பினான்.

இரண்டாவது அத்தியாயம்.

நந்த பத்தினிகளின் நிர்மாணம்.

சேனாபதியான பாகுராயணன் கிழவரசனிடம வந்து செல்வதை, தந்தம் அருமைக் கணவரை இழந்து கதறிக்கொண்டிருந்த நவநந்த பத்தினிகளும் அறிந்து, அச்சம் அடக்கம் நாணம இவைகளைத் துறந்து, அந்தப்புரவாயிலில வந்து நின்றார்கள்.

அவர்களில ஜேஷ்ட சுந்தனை பட்டமகிஷியானவள், பாகுராயண னை நோக்கி, "ஐயா! பாகுராயண! இப்பொழுது தெய்வ சங்கற்பத் தால நடந்திருக்கும் இந் கவகந்தப பிரளயத்தை நீயும் அறிந்திருக் கிறாய் அல்லவா? நாங்கள் கணவர்களை இழந்தபின், இனி ஏனோ இவ் வுலகில் இருக்கவேண்டும்? சைத்தியம் (குளிர்ச்சி) அதிகரிப்பதால் தானும் அதிகரித்து ஜவலிக்கும் 'வடவாக்கினி' போல, சமாதான வார்த்தைகளால அதிகமாகச் சுடர் விட்டெரிகின்ற 'பதியை இழந் த தாலுண்டான சோகாக்கினி யானது', கொழுந்து விட்டெரியும் அக்கினியால் அல்லது, மற்றப்படி ஒன்றாலும சமனம் அடைய மாட்டாது. பெரிய அரசர், புத்திர சோகத்தால மனங்குழம்பி இரு ப்பது பற்றி அறிவிழந்து உலக விவஹாரததை முழுதும் மறந்த வராக இருக்கிறார். ஆதலால், எங்கள் அபிப்பிராயத்தை அவர் இச் சமயம் மறுக்கவும் கூடும். எங்களுடைய எண்ணத்திற்கு ஒரு வித்த் திலும் தடை ஏற்படாமல் நீ முனைந்து, எங்களுக்கு நற்கதி கிடை ததைப் பதிலோகஸ்தானத்தை யடையும்படியான காரியங்களைக் நடத் தித் தரல் அவசியமும் முக்கியமுமாக இருக்கிறது. நீ இப்பொழுது ஒரு காரியம் செய்:—இனி அரசனுக்கும் சாதிரகுப்தனிடம் சென்று "எங்கள் பரலோக ஸாதகத்தின் பொருட்டு இதோ இந்தக் கோ டிக்கணக்கான திரவியத்திற் காற்பங்கு பிராமண சிரேஷ்டர்களுக் கும், காற்பங்கு ஸஹகமனம் (உடன் கட்டையேறல்) செய்வத ற்குரிய பூர்வ கர்மத்திற்கும், காற்பங்கு அநாதைகளைப் போஷிப்ப தற்கும,செலவழிக்கபபடட்டும்என்றும்,மீந்துள்ள காற்பங்கை ராஜ பொக்கிஷத்தில் அவன் சேர்த்துக் கொள்ளட்டும" என்றும்,அவனி டம்தெரிவிப்பாயாக. சத்துரு உபத்திரவமின்றியும், துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனத்துடனும், கீர்த்தியுடனும, புத்திர பௌத் திரருடன், அவன் நெடுநாள் அரசாட்சி புரியும்படி நாங்கள் யாவ ரும் முழுமனதுடனும மெய்ப் பிரியத்துடனும் அவனை ஆசீர்வதி த்த தாகவும் அவனுக்குச் சொல்ல வேண்டியது. இனி எங்களுக் காக வேண்டிய மேல்காரியங்களுக்கு அதிவிரைவில் ஏற்பாடு செய்து எல்லாம் தயாரானதும் அறிவித்திடுக" என்றாள்.

இது கேட்டு,ஸமீபத்திலிருந்தவர்களில ஒருத்தி,"அன்புள்ள தமக்கை மார்களே! முடியுமானால், "எங்கள பர்த்தாவை அழை

த்து வந்து உயிருடன் காண்பியுங்கள்" என்று கெஞ்சிக் கேட்கலாம் "இல்லை, முடியாது" என்றால், "பர்த்தாவின் பிரேதத்தையேனும் காண்பியுங்கள்" என்று சொல்லலாம். நாமோ அதுகூடக் காண்பதிற்கில்லை நினைத்தவிடத்தில் கிடைக்கும் அக்கினியை "நீ மூட்டிக்கொடு" என்று வேறொருவரை என்னகேட்கிறது! நாமே இது செய்து கொள்ள முடியாதா? நமது கணவர்கள் பரலோகம் சென்றபின் இந்த மாளிகையை யாருக்கு நாம் உபயோகப் படுத்தவேண்டும்? தன தானியங்களாலும் வஸ்திராபரணங்களாலும் பூரணமாக நிறைந்திருக்கும் இவ்வரண்மனையை அக்கினிக்கு ஆகுதி யாக்கி, நமது சரீரத்தையும் அத்தீக்கே ஸமர்ப்பித்து விடுவோம்" என்றாள்

இவைகளைக் கேட்டுக் கொண்டிருந்த பாகுராயணன், பதிவியோகத்தால் உண்டாயிருக்கும் விஸனத்தைத் தாங்கமாட்டாது, அறிவிழந்து பரிதபிக்கும் இந்த ராஜஸ்திரீகள், பிறரது யோகக்ஷேமம் இன்னதென்றும், இது 'செய்யலாம்' அல்லது 'கூடாது' என்றும், சற்றும் யோசிக்கப் போகிறதில்லை. இதனால் இந்தப் பட்டணத்திற்கே பெருத்த அபாயம் உண்டாகும்போலிருக்கிறது. இவர்களில் ஜேஷ்ட நந்தனது பட்டமகிஷி ஒருத்தியே விவேகியாகவும், பொறுமை வாய்ந்தவளாகவும் காணப்படுகிறாள். அவள் சொல்லும் விதமே செய்ய வேண்டியது முக்கியமும் அவசியமுமாக இருக்கிறது' என்று தனக்குள் நிச்சயித்து, "மாது ஸ்ரீகளே! தாங்கள் சொல்லும் வார்த்தை நல்வழிக்கு ஒத்ததாக இராததுடன், தர்ம விருத்தமாயும் இருப்பதால், அது உங்களுக்கு நற்கதி தரமாட்டாது. மஹா மாதுஸ்ரீயவர்கள் உத்திரவிட்டிருக்கும் வழியைத் தாங்கள் எல்லோரும் தயவுசெய்து அனுசரிக்கும் பக்ஷத்தில், எல்லோருக்கும் கீர்த்தியும் உண்டு நீங்கள் அப்பொழுது பரமபதம் அடைவதில் ஸந்தேகமே இல்லை. சற்றுப் பொறுங்கள். யுத்த பூமியைப் பரிசோதித்து வந்து விக்ஞாபனம் செய்துகொள்கிறேன். உத்திரவாக வேண்டும்" என்று கைகூப்பிக் கும்பிட்டுவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தான்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ்சண்முகனார் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ஏவல் இடம்பொருள்கள் யாவுமிருந் தென்? மன்னன்
மாவிருந்(து)ஏ லான்கண்ணன் வள்ளுவரே!—மேவாப்
புறத்(து) உறுப்(பு) எல்லாம் எவன் செய்யும் யாக்கை
அகத்(து) உறுப்(பு) அன்(பு) இல் லவர்க்கு? (௬)

(அ-ம் முதலியன):—ஏவல்-வேலைக்காரர், மன்னன் - துர்யோதன ராஜனது; ஏலான்-அங்கீகரிக்கவில்லை, மேவா-விருப்பில்லாத அல்லது பொருந்தாத, யாக்கை அகத்து உறுப்பு-உடம்பின் அகத்தே நின்று இல்லறத்திற்கு அங்கமாகிய, இல்லவர்க்கு-இல்லாதவர்க்கு.

கண்ணன் துர்யோதன மன்னனது விருந்து ஏலாமை:—பாண்டவர்கள் ஒருகாலத்தில் கண்ணிழந்து மாயக கவறாடி நாடு நகரம் முதலியன இழந்ததும், இழந்த யாவையும், பின்னர், திரௌபதியின் கற்பு வலியாலும் திறத்தாலும் மீட்டும், தூர்யோதனாதியர் அவற்றைத் தர உடன்படாது 12-வருஷ வனவாசமும் ஒருவருஷ அஞ்ஞாத வாசமும் திரௌபதியுடன் ஐவரும் குறைவற முடித்துத் திரும்பினால்தான், அவர்குட்குரிய தாய பாகம் கொடுபடு மென்று கூறியதும், யாவரும் அறிந்ததே. தூர்யோதனாதியர் விதித்த நிபந்தனைப் பிரகாரமே தருமனாதியர் செய்து, தமக்குரிய பாகங்களைத் தருமாறு கேட்டுவர ஸ்ரீகிருஷ்ணனைத் அநுப்பினர். ஸ்ரீ கிருஷ்ணன் அவ்வாறே சென்று, தூர்யோதனனுடைய விருந்தாளியா யிராமல், பரம பாகவதனும உத்தமனுமான விதுரனையே தனது அதிதியாகக் கொண்டான். இஃதறிந்த தூர்யோதனன் சினந்து, "வணங்காமுடி மன்னனாகிய என்னிடம் வராது, பரம ஏழையும் இழிந்தவனுமான விதுரன் விருந்து ஏற்றதென்?" எனக் கூற ஸ்ரீ கிருஷ்ணன, "ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடக் காரணம் இரண்டே உண்டு: ஒன்று அன்பு. மற்றொன்று ஆபத்து. எனக்கோ ஆபத்தேதும் இல்லை. உனக்கோ அன்பில்லை. ஆகையால் உன் வீட்டில் நான் எங்ஙனம் உண்பது? அன்புள்ளான் விதுரனே ஆதலின அவன் அகத்தில்தானே நான் உண்ணவேண்டும்? இதில் என்ன தவறு?" என்று பொருள்பட,

"அன்பின் இடுஞ்சோறும் ஆபத் திடுஞ்சோறும்
இன்ப முடன் இடுஞ்சோ(று) இரண்டுண்டே—அன்புஇலை

இல்லாத ஊன அகத்தில் உண்ணுமா(று) என்னனே
மல்லாடு திண்டோளாய்! மற்று.

எனக் கூறினன். நிற்க. இவ் 'வள்ளுவர் நேரிசை வெண்பா'வில் உள்ள கருத்தை

"இல்லானுக்(கு), அன்பின் இடமபொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்துமவற் கென் செய்யும்?—நல்லாய்!
மொழியிலார்க் கேது முதுநூல்? தெரியும்
விழியிலார்க் கேது விளக்கு?"

என்ற நன்னெறி வெண்பாக் கருத்தோடு ஒப்பிட்டறிக.

தான் பெற்ற நாகர்பொய் சாற்றுமை யாற்சபித்த
மானமொன் றுக்குகாரணமென்? வள்ளுவரே!—ஊன்பெற்றென்?
அன்பின் வழிய(து) உயிர்நிலை. அஃதிலார்க்(கு)
என்புதோல் போர்த்த உடம்பு (ய)

(அ—ம் முதலியன):—நாகர்—பாம்புகள், மான்—மான்போன்ற கத்துரு, பொன்று—இறவாத, ஊன்—சரீரம், அன்பின்வழியது—அன்புமுதலாக அதன் வழிநிற்கும் உடம்பே, உயிர்நிலை—உயிர் நிற்கும் உடம்பாகும்.

☞ இச் செய்யுளில் உள்ள குறளுக்கும், ஆசிரியர் அதனை விளக்கக் கூறியுள்ள விஷயத்திற்கும் உள்ள பொருத்தம் எனக்கு நன்றாகத் தெரியவில்லை. ஆயினும் இயன்றவாறு விஷயத்தைப் பொருத்திக் கூற முயன்றனேன். தவறு இருக்குமாயின் அன்பர்கள் அதனைக் காலதாமதமின்றி எனக்கு அறிவிக்கவும், விஷயத்தைப் பொருந்தப் பொருத்திக் காட்டவும் வேண்டுகிறேன்.

பொய் சாற்றுமையின் கத்துரு தம் மக்களாகிய நாகர்களைச் சபித்தது:—காசிப முனிவர்க்குக் கத்துரு, விநதை என்ற இரு மனைவியருண்டு. இவர்களில் கத்துரு நாகங்களை ஈன்றவள். விநதை கருடன், அருணன் முதலியோரது தாய். கத்துருவும் விநதையும் ஒருநாள் திருப் பாற்கடற் கரையில் உச்சைச்சிரவம் என்ற இந்திரனது வெள்ளைக் குதிரையைக் கண்டனர். கண்டதும் அதனைக் குறித்து வேடிக்கையாக ஸம்பாஷிக்கையில், கத்துரு, விநோதார்த்தமாக, 'அக்குதிரைவால் கறுப்பு' என்னலும், விநதை "இல்லை. அது முற்றிலும் வெள்ளை" என, உண்மையைச் சாதித்தாள். கத்துருவுக்கு இதன் உண்மை தெரிந்திருந்தும், அவள் சொல்வதற்கு இணங்குவது தனக்கு அகௌரவமென எண்ணி, அது கறுப்பென்றே வாதித்தாள். இவ்வாறிருவரும் இசைந்து போகாமையின் வாக்குவாதம் வரவர முற்றியது, கடைசியில் மறுநாள் இருவரும் குதிரையருகிற்

சென்று பார்க்க வேண்டுமென்றும், யார் சொல் பொய்யாய் விடுகிறதோ, அவர், மற்றவர்க்கு அடிமையாய் விடவேண்டுமென்றும், தம்முள் நிர்மாணித்துக் கொண்டு வீடு திரும்பினர். மாலையானதும், கத்துரு தம்மக்களை நோக்கி, "எப்படியாவது என வார்த்தையை மெய்ப்பிப்பதற்கானவை நீங்கள் செய்து தீரவேண்டும்" எனவற்புறுத்திக் கூறினள். ஆயினும் ஆதிசேஷன் வாசுகி முதலியோர் "உச்சைசிரவத்திற்கு ஓர் ஓசம் கற்பிப்பதும், பொய் கூறுவதும், பாபம்" எனக்கூறி, ஏதும் செய்யமறுத்து விட்டனர். கார்க்கோடகன் ஒருவனே தாய்க்கஞ்சி ஓடிக் குதிரைவாலை நஞ்சூட்டிக் கறுக்கச் செய்தனன். இஃதறியாப் பேதை விநதை, மறுநாள் அதனைக் கண்டு கத்துருவுக்குத் தன்வாக்குப் பிரகாரம் அடிமையாயினள். கத்துரு, தன் மொழியை மறுத்து, அதனால் தன்னை அவமானத்திற்குட் படுத்த இருந்த தன் மக்கள் யாவரையும் சர்ப்ப யாகத்தில் இறக்குமாறு சபித்தனள்" என்பதே.

"தொடர்ந்த மும்மல முருக்கி வெம் பவக் கடல் தொலையக் கடந்தோர்களும கடப்பரோ மக்கள்மேற் காதல்?" கத்துரு, இயற்கைக்குவிரோதமாய்த் தான்பெற்ற மக்களிடம் அன்பிலளாய் இருந்தமையின், இருந்தும், அவள் இறந்தவளே ஆயினள். உயிர் இருந்தால் அன்றோ சாவு என்பதும் உண்டு. அன்பில்லா உயிர், வெறும் என்பு தோல்போர்த்த யாக்கையே அன்றோ?.

ஒன்பதாவது அதிகாரம்.

விருந்தோம்பல்.

வித்தும் அரித்திட்டு விருந்தோம்பி னார்மாறர்
வைத்த பொருள் போயபின்னும் வளருவரோ!—மொய்த்தே
இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு (௧)

(அ—ம் முதலியன்):—வித்து—முளை நெல், விருந்து—விருந்தினராக வந்த பரமசிவக் கடவுளை. ஓம்பினார்—உபசரித்தார், மாறர்—இளையான்குடி மாற நாயனார், மொய்த்து மிகுதியும், இருந்து ஓம்பி இல்—இல்லின்கண் இருந்து பொருள்களைக் காப்பாற்றி, விருந்து—புதிதாக வந்தவர்கள், வேளாண்மை—உபகாரம்.

'இருந்து ஓம்பி இல்' என்பதை 'இல் இருந்து (பொருள்) ஓம்பி' என ஆக்கிப் பொருள் கொள்க

மாறனார் வித்தும் அரிந்து விருந்தோம்பியது:—பரமக்குடிக் கடுத்த இளையான்குடி, என்னும் ஊரிலே, வேளாளர் குலத்திலே தோன்றியவரும், 63-நாயன்மார்களில் ஒருவருமாகிய மாறனார், சிவனடியார்கட்குத் திருவமுது செய்விப்பதையே தமது கடமையாகப் பூண்டு ஒழுகியவர். இவரைச் சோதிக்கக் கருதிய சிவபெருமான், இவர்க்கு ஆற்றற்கரிய வறுமைப் பிணியுண்டாக்கினர். அப்போதும் அவர், தம் கொள்கை மாறாது, கடன்பட்டாயினும் விருந்தோம்பி வந்தனர். ஒருநாள், பரமசிவக்கடவுள், பெருமழை பொழியும் இரவில்; சிவனடியார் வேடத்துடன் நாயனாரது வீடுற்று உணவு வேண்டினர். அகாலத்தில் வந்தும், அவரை, நாயனார் அக மகிழ்ந்து வரவேற்று, பொறைபுறு கற்பரசியாகிய தம் மனைவியிடம் சென்று 'கொண்டான் குறிப்பறியும்' அக்கோதையை நோக்கி,

"நமக்கு முன் பி(ங்கு) உணவிலை. ஆயினும்
இமக் குலக்கொடி பாகற்(கு) இனியவர்
தமக்கு, நாம்இனி அடிசில் தகவுற
அமைக்கும் ஆ(று)எங்ஙன்? அணங்கே!" என

மாது கூறுவள்: "மற்றொன்றும் காண்கிலேன்
ஏதி லாரும் இனித்தரு வார்இலை
போது வைகிற்று. போம் இடம் வேறிலை.
தீது செய்வினை யேற(கு)என் செயலென்று

செல்லல் நீங்கப் பகல்வித் தியசெந்நெல்
மல்லல் நீர்முளை வாரிக் கொடுவந்தால்
வல்லவா(று)அமு(து) ஆக்கலும் ஆகும்.மற்
றல்ல தொன்றறி யேன" என(று) அயர்வுற,

அவ்வணமே, நாயனார் வயலிற் சென்று, செந்முளை வாரிவந்து, பாத்தி நிரம்பா இளங்கீரையுடன் அதை அவளிடம் கொடுத்தனர். கொடுக்கவும் அவள் வெவ்வேலை வறுத்துப் பதம் செய்து அரிசியாக்கிச் சமைத்து, அடியார் உருக்கொண்டு வந்த அரனார்க்குப் படைத்தனர். உடனே சிவபிரான் நாயனாரது பக்தி முதிர்ச்சிக்கும் அவரது மனைவியின் இல்லற மாட்சிக்கும் வியந்து, நித்தியானந்தப்பெருவாழ்வு ஈந்தருளினர்." என்பதே. இவரது முழுவரலாற்றையும் பெரிய புராணத்தினின்றும் அறிந்துணர்க.

நீடுவா ழச்செய்யும் செல்விக் கனி அதிகன்
வாட்டா(து)ஒள வைக் கீந்தான் வள்ளுவரே!—நாடில்,
விருந்து புறத்ததாத் தானுண்டல், சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று (உ)

(அ-ம் முதலியன):—நீடு-நெடுநாள், அதிகன்-அதியமான் நெடுமானஞ்சி; வாடாது-(பசி முதலியவற்றால் வருந்தாதிருக்குமாறு), நாடில்-ஆராயின், விருந்து-அதிதிகள், புறத்ததுஆக-வீட்டின் வெளிப்புறத்திருக்க, சாவா மருந்து-மரணமுறச்செய்யாத் தேவாமிர்தம், வேண்டற்பாற்றன்று-விரும்பப்படத் தக்கதன்று.

அதிகன் நெல்லிக்கனி ஔவைக்கீந்தது:—மழவர்களுக்குத் தலைவனும் கடையெழு வள்ளல்களில் ஒருவனுமான அதியமான் நெடுமானஞ்சி, ஓர் சிறந்த யுத்த வீரன். இவனுக்கு ஒருகாலத்தில் உண்போரைத் தீர்க்காயுளுடன் ஜீவித்திருக்கச் செய்ய வல்ல கருநெல்லிக் கனி கிடைத்தது. (இக்கனியினது மகிமை, 'இனிய உளவாக' என்றுதொடங்கிய குறளில். 'கனியிருப்ப' என்பதற்குப் பொருள் கூறி வரும்போது, பரிமேலழகர், 'இனிய கனிகள்' என்றது 'ஔவையுண்ட நெல்லிக் கனிபோல் அமிழ்தானவற்றை' என்று கூறியதாலும் நன்கு விளங்கும்.) அதிசயமான இக்கனியின் பெருமையை அவன் நன்குணர்ந்திருந்தும், அவனுக்கு அக்கனி கிடைத்த சமயம் ஔவை அவனது அதிதியாகச் சென்றிருந்தமையால் தன் போன்ற யுத்த வீரனினும், நாற் பொருளும் பயக்கும் கல்வியிற் சிறந்த உத்தமி உயிர்வாழின், உலகோர்க்கு மிக்க நன்மை யுண்டென உணர்ந்தும், ஆதித்தியம் கருதியும், முழுக்கனியையும் ஔவைக் கீந்து புகழ் பெற்றான்'' என்பதே.

(இன்னும் வரும்.)

ம. கோ.

ஆத்திசூடி வெண்பா.

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கரைந்தழைத்துக் காகங் கடும்பசியிற் சுற்றம்
பரிந்தூட்டிப் பின்புண்ணும் பண்பால்—தெரிந்தேற்று
வையம் பிறர்க்கடனை வைத்தங் குவப்புறுமால்
'ஐயமிட் டுண்'கஅத னால்

(இ-ள்) காகம்-காக்கையானது, கடும்பசியில்-கொடுமையான பசியிலும், சுற்றம்-தன் போன்ற காக்கைகளை, கரைந்து அழைத்து-கூப்பிட்டுக் குரலோசையால் வரச் செய்து, பரிந்து-அன்புடன், ஊட்டி-(தனக்குக் கிடைத்த சிறிய ஆகாரமாகிய யாதாமொருபொருளையும்) முன்பு உண்ணச் செய்து, பின்புஉண்ணும்-அதன் பின்னர் தான் உட்கொள்ளுகிற, பண்

பால்—தன்மையினால், வையம்—உலகினர், தெரிந்து—நன்கு ஆலோசித்து, மற்று—சிறப்பாய்க் கொண்டு, பிதிர்க்கடனை—இறந்த தாய்தந்தையாதியருக்குப் பிரீதியாகச் செய்யும் வைதிக காரியங்களில் இடும் அன்னம் முதலியவற்றையும், வைத்து—கோடாநு கோடி ஜீவபேதங்களிலும் இக்காக்கைகளை அதனை ஏற்றுத் தேவர்களுக்குப் பிரதிநிதியாய் அங்கீகரிக்க உரியவெனக் கொண்டு அவைகட் கிட்டு, அந்து—அவ்வச் சமயங்களில், உவப்புறும்—சந்தோஷிப்பார்கள், அதனால்—ஆதலால், ஐயம்—பிச்சையை, இட்டு—பிறருக்குமளித்து, உண்க—நீங்களும் புசிப்பீர்களாக.

காக்கைகள், 'தம் சுற்றத்தினையே தழுவுமன்றிப் பிறவற்றிற் கிடுவனவல்ல' வென்று சிலர் கூறலாம். ஆயின், மனிதரும் மனித வர்க்கத்தினருக்கே இடுவதைத்தான் அறநூலோர் முதன்மையாக அறிவுறுத்தினரன்றி வேறில்லை. 'ஜீவகாருண்ணியம்' என்பது பொதுவாக அறிவிற் சிறந்த மானிடருக் கியல்பான நற்குண மாயினும், 'ஐயமிடல்' என்பதே மனிதவர்க்கத்தினரைக் குறித்ததாகும். ஆதலின் அச்சங்கை பொருந்தாது.

இனி 'ஐயம் இட்டு உண்' என்பதனை ஆராயுமிடத்து, தனவந்தர் இடும் அன்னதானத்தைக் குறிக்காது, பரம ஏழைகள் செய்யும் பரோபகாரத்தையே குறிக்கும் என்றும் விசேடப் பொருள் கூறலாம். தனக்கென உரியதொன் றின்றித் தான் யாசித்து ஏற்கும் பிச்சைச் சோற்றினும், அதனிலும் ஒரு கவளம் தன்போற் பசித்தவர்களுக் கிட்டு, பிறகு, தானும் உண்ணல் வேண்டும் என்று பொருள் தருமாயின், செல்வர்கள் செய்ய வேண்டிய கடமையை ஈண்டுக் கூறவும் வேண்டுமோ? இக்காக்கை ஏனைய பட்சிகளைப் போலாது எவ்விடத்திற் றனக்கு ஒரு அவிழ் (பருக்கை) கண்ணிற் பட்டாலும, அதனையும் தான் உண்ணாமல் கூவிக் கூவிப் பின்னும் பல காகங்களை வரவழைத்து, அவைகள் அதனை மூக்காற் கொத்தி உட்கொள்வதைக் கண்ட பின்னரே தான், அதனை யுட்கொள்ளும் குணத்தினைப் பிறவிக் குணமாகக் கொண்டுள்ளது. அறநூல்களை முறைப்படி ஆராய்ந்து தெளிந்தவர்களும் கைக் கொள்ள முடியாமல் தவறுவ தியற்கையாதலின், கடவுள் கருணையினாலேயே இப்பட்சிகள் மூலமாக நமக்கிதனை யறிவுறுத்தவே இவ்வண்ணம் சிருஷ்டித்தா ரெனறு கொள்ளல் வேண்டும. ஆன்றோரும் அது குறித்தே உலகவாழ்க்கையில் வருணாச்சிரம ஒழுக்கினை நிலை நிறுத்துவதாகிய வைதிக காரியங்களில் தேவர்களுள் ஒரு பகுதியினராகிய பிதுர் உலகினர்க்கு இடும் பொருள்களை இக்காக்கைகளைக் கூவி யழைத்து, இவைகட் கிட்டு, இவைகள் ஈண்டால் அதனை அத்தேவதைகளே யுண்டு தம்மை ஆசீர்வதிப்பதாகப் பாவிக்கும் தொன்று தொட்ட வழக்கத்தினை விதித்துள்ளனர் என்று கூறல் பொருந்தும். சிற்க.

கந்தமூலங்களையே அருந்தி தரும சிந்தையுள்ளவர்களாய் வானப்
பிரஸ்தாசிரமத்திலிருந்த ஒரு பிராமண குடும்பத்தினர், முழுதும்" வனத்
தெ பொறுக்கி மாதம் ஒருமுறை அன்னமாகச் சமைத்து உட்கொள்
ளும் உணவினை, பசித்து வந்த ஒரு அதிதிக்களித்து மிச்சம் இன்மை
யால் பசியால் இறந்தனரென ஒரு கதையுண்டு. அவ்வாறு அறம் செய்வதை
ஒளவையார் ஒப்பாதவர் போல், பிறர்க்கிடுவதோடு, இடுவோரும்
உண்ணல் வேண்டும் என்று வற்புறுத்தினார் என்பது தேற்றம். இத்த
கைய தெய்வீக குணம் வாய்ந்தவர்கள் அன்னமய கோசமாகிய சரீர
போஷணையைக் கவனியாமல் பிறருக்கே யிட்டு வருவாராயின், ஐயம் இடு
வோரேயில்லாமல், அறநெறி மறநெறியாகுமென்பதும் உய்த்துணரப்படும்.

பசிப்பிணி யொன்றையே, கடவுள், மானிடரில் நல்லோரையும் தீயோ
ரையும் அளந்தறியும் அளவு கருவியாக உண்டு பண்ணியுள்ளாரென்றறிக.
பசிப்பிணி யென வொன்றில்லையேல், உலகில் உபகாரச் செய்கையே இல்லை
யாகும். உபகாரச் செய்கையும், இரக்கம் தோன்றுவழி உண்டாவதன்றோ.
ஏற்பாரில்லாவழி எல்லோரும் அறஞ் செய்ய எண்ணமுள்ளவர் போல்
ஒரே தன்மையிற் காணப்படுவர். ஆகவே, ஐயமிடும் மனநெகிழ்ச்சியுடைய
உத்தமர்களைக் கண்டறியவே 'பசி' எனனும் (எவராலும் மறுக்கமுடி
யாத) ஒரு உபாதியினைப் பரம கருணையினால் நமக்களித்த அப் பரம்
பொருளை நாம எவ்வாறு புகழினும் பொருந்தும். ஏழைகட்கே பசியென்
பதின்றி தனிகருக்கும் உண்டாயிருப்பது அப்பசி இத்தன்மையினதென்று
அதன் வல்லமையை யனுபவத்தால் அறியும் பொருட்டேயன்றிப் பிறி
தில்லை. சுயநலமே பெரிதென்றும், சுய நலத்திற்காகவே தாம் பிறந்திருப்
பதாகவும் எண்ணாமல், பரோபகாரத்திற்கே சரீர மெடுத்தோம் என்று
கருத வேண்டுவது ஒவ்வொருவர்க்கும் தலைக் கடமையாகும். ஐயமிடும்
குணம் அமைந்திருத்தலினாலேயே அழகிற் சிறந்த அன்னம், மயில்,
முதலிய பட்சிகளிலும் சிறப்பாக அறக் கரிய காக்கைகளை ஆன்றோர் உயர்வு
படுத்தினர் என்பதைப் பின்பற்றியே நானும் அவ்வுதாரணத்தினைக் கூறி
யது இயல்புடைத்தாம்.

அசலாம்பிகை அம்மாள்.

எருவைப் பற்றிய பழமொழிகள்.

1 அறிவிலே விளையுமா, ஏர்நுனியிலே விளையுமா?
2 ஆடு ஊடாடக் காடு விளையாது
3 ஆடு பயிர் காட்டும்; ஆவாரை நெல் காட்டும்.
4 ஆட்டுரம் ஓராண்டு நிற்கும்; மாட்டுரம் ஆறாண்டு நிற்கும்.
5 ஆட்டெரு அந்த வருஷம்; மாட்டெரு மறு வருஷம்.
6 உரம் செய்வது ஊரார் செய்யார்.
7 எரு உதவுவது போல் இனத்தோர் உதவார்.
8 எருக்குழி யின்றி ஏர் பிடியாது.
9 ஏரோட்டுவதிலும் எரு இடுதல் நன்று.
10 காணிக்கு ஒருகருவேலும், வேலிக்கு ஒரு மூங்கிலும்.
11 குப்பை உயர்ந்தால் குடி உயரும்.
12 நிலத்தில் எழுந்த பூண்டு நிலத்தில் மடிய வேண்டும்.

எம். எம். நாராயணஸ்வாமி ஐயர்.

குசேலர் சரித்திரம்.

(23—ஆம் பக்கத் தொடர்ச்சி.)

நற்குணம் நிறைந்த பேதையர்க்கரசியாகிய தன் நாயகி கூறிய யாவையும் குசேலர் மிக்க பொறுமையுடன் கேட்டு, அவளை நோக்கி, "அன்பே!

"பல்லாவுள் உய்த்து விடினும் குழக்கன்று
வல்லதாம் தாய்நாடிக் கோடலை— தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தே, தற்செய்த
கிழவனை நாடிக் கொளற்கு."

நாம முற்பிறப்பிற் செய்த நனமை தீமைகளுக்குத் தக்கபடி இப் பிறப்பில் சுகாசுகங்களை யனுபவிக்கிறோம. இவ்வுலகின் கணுள்ள எண்ணிறநத ஆன்மாக்களனைத்தும பலவிதமான எண்ணங்களோடு கூடியவை. ஆனமாக்க ளெண்ணப்படி முடியுமாயின், கீழோர் மேலோர் என்ற வரம்பு உளவாகா. அவரவர் விதிவழிச் சகலமும்நடக்குமேயன்றி அவரவர் எண்ணபபடி நடவா. அதிகம சொல்வானேன்? "வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி தொகுத்தார்க்குந் துய்த்த லரிது." கல்லுக்குள் ளிருக்குமதேரைக்கும், முட்டைக்குள் ளிருக்கும் உயிர்கட்கும், ஆகாரத்தைத் தந்து காக்கு மிறைவன், உன் மைந்தரைக் காத்தருளா தொழியான். பிறக்குங்கால் பிரமன் எழுதின எழுத்துச் "சிறுகா; பெருகா; முறை பிறழ்ந்து வாரா." ஆகையால் உனது புத்திரர்களுக்கு ஆயுளுள்ளவரை, பகவான் அவர்கள் ஊழ்வினைக்குத் தக்கபடி உணவளிப்பான். எதுநேரிடினும் ஊழ்வினைப் பயனெனக் கருதித் துயரப்படாம லிருக்கவேண்டும். மெய்ஞ்ஞான நூற்களைக் கற்றுணர்ந்தோர், செல்வம், அழகு, இளமை, யாக்கை முதலியன நிலையிலா வென வுணர்ந்து, "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான் யாதினும் அரிதரிது" என எண்ணி, கொலை புரிதல் நஞ்சிடுதல், சிநேகரை வஞ்சித்தல், நல்லாரை இகழ்தல், பொய்ச் சாட்சி சொல்லல், ஆலயத்திடத்துச சென்று களவு புரிதல், முதலிய தீக் கருமங்களை யொழித்து அநித்தியமான பொருள்களிடத்து இச்சை வைக்காமல், எம்பெருமானது திருவடித் தியானமே பெருஞ் செல்வ மாகுமென்று நினைப்பார்கள். பொருளாலாகிய பயன் என்னை?

கற்புடைய மாதர் நலத்தை யழிப்பதும் பாழ்ம்பொருளே. தெய்வ சிந்தையை ஒழிப்பதும் பாழ்ம்பொருளே. நாம் எவ்வளவு பெருஞ் செல்வ முடையரா யிருப்பினும், யம தூதர்கள் நம்மை அழைக்க வந்த காலத்து "ஒரு கோடி பொன் கொடுப்பேன்; சற்றுப்பொறு. எனது உறவின் முறையார்கட்குச் சமாதான வார்த்தைகள் சொல்லி வருவேன்" என்னப் புகலின், அவர்கள் தமது பாசக்கயிற்றால் கட்டுதலை யொழித்து நீங்குவரோ? அகிலமெல்லாங் கட்டி யாளினும், ஆசைக்கோ ரளவில்லை யாதலானும், பற்றற்றவரே பரமபதம் எய்து வாராகையாலும், மனத்திருப்தி உள்ளவனுக்கே தரித்திர மில்லை யாகையாலும், துளவ மாலையை அணிந்த தம்மை நினைக்கின்ற அன்பரது மனதில் விரைந்து சென்று வாழ்பவனான எம்பெருமானாகிய ஸ்ரீகண்ண பிரான் சந்நிதியை அடைந்து, நித்தியானந்த சொரூபமாகிய அச்செல்வத்தை அடையாமல், கேவலம் துக்க ரூபமாயிருக்கும் இச் செல்வத்தையோ நான் விரும்புவேன்? நீரிற் பிறந்திடும் குமிழியாகும் இந் நிலையிலா உடலைப் போற்றி, இச்சம்சாரமாகிய சேற்றில் யான் சுழலேன்" என்றார்.

மாதவத்தோராகிய குசேலர் சொன்ன வார்த்தை யாவும் யதார்த்தமென் றறிந்திருந்தும், புத்திரவாஞ்சை மேற்கொண்டவளாகிய அவரது மனைவி, அவரது அடியிணையைத் தொழுது "சதுர் வேதங்களையும் ஆறு சாஸ்திரங்களையுங் கற்றறிந்தவரே! யாவும் ஊழ்வினைப் படியே நடப்பனவாயினும், நாம் முயற்சி செய்யாவிடின், உழுதபின் பயிரிடா நிலம் போலாகும்.

"தெய்வத்தா லாகாதெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்பது தாங்கள் அறியாத தன்றே? "குலமகட்குத் தெய்வங் கொழுநனே" யாதலால் எளியேனாகிய என்னை அன்போடு காத்தருள்வது உமது கடமையே யாகும். ஆகையால் கண்ணபிரானிடம் சென்று, நீர்பெற்ற அருமை மக்களையும் என்னையும் தேவரீர் காத்தருள வேண்டும்" என்று இரங்கிக்கூறினள்.

மங்கையர்க் கரசியாகிய தன் மனைவியின் சொற்களைக் கேட்ட குசேலர், "இவள் சொற்படி நடந்தால் ஜகதீசுவரனான வாஸுதேவ

னுடைய ஸேவை நமக்குக் கிடைப்பதோடு, சிறு புதல்வர்கள் நிமித்தம் மனம் வருந்துகின்ற இவள் எண்ணமும் நிறைவேறும்" என நினைத்து, துவாராகாபுரிக்குச் செல்ல உடன்பட்டு, தன் மனையாளின் முகத்தை நோக்கி, "பெண்ணே! அரசன், ஆசாரியன், கடவுள், சிசு, இவர்கள்பாற் செல்லுங்காலையில் வெறுங் கையோடு போகலாகாது. வேதநாயகராகிய ஸ்ரீகண்ணபிரான், அரசனும் கடவுளுமாயிருக்கின்றபடியால், அவருக்குக் கொடுப்பதற்கேதேனும் ருசிகரமான பட்சணம் இருக்கிறதா? ஒரு புல்லின் நுனியிற் றங்கிய பனித்துளி சேர்வதினால் ஸப்த ஸாகரங்களும் நிரம்பா. அதுபோல், நான் கொண்டு செல்லும் பட்சணம் அகிலாண்டகோடி பிரமாண்ட நாயகரான ஸ்ரீகிருஷ்ணனுக்கு உவகையை உண்டாக்காது. எனினும், "மலை அளவு தெய்வத்திற்குக் கடுகளவு கற்பூரம்" என்பதுபோல் ஏதேனும் மெய்யன்புடன் சிறிது காணிக்கையேனும் கொண்டுபோகவே வேண்டும்" என்றார்.

இங்ஙனம் கூறிய தன் கொழுநன் சொல்லைக்கேட்டு, அவ்வுத்தமி மனமகிழ்ந்து, 'இதோ கொணர்ந்தேன்' என்று சொல்லி, அங்கிருந்த நான்கு ரிஷி ஆச்சிரமங்களுக்கேகி, நான்குபிடி அவல் வாங்கிக் கொண்டு வந்து, முனிவரது கந்தையினில் ஓர் பக்கத்தில நன்றாய் முடிந்து, அதன்மேல் அனேக கந்தல்களையும் மரவுரியையும் சுற்றி, குசேலர் கையிற் கொடுத்து வணங்கி நின்றாள்.

வறுமையிற் செம்மை வாய்ந்த அம்முனிவர் அதைப்பெற்றுக் கொண்டு பகவானைக் காண விரும்பி, பலநாள் அன்னபானாதிகள் இல்லாமல் ஸர்வேச்வரனான ஸ்ரீ கிருஷ்ணனுடைய ஸேவை எவ்வண்ணம் தமக்கு கிடைக்கப் போகிறதென்று பலவாறாகச் சிந்தித்துக்கொண்டே விரைந்து நடந்து, மேல்கடலை அடைந்து, மகா சந்தோஷத்துடனே ஓர் புன்னை மரத்தின் நிழலிலுட்கார்ந்து சிறிது இளைப்பாறினர். பிறகு, அரைக் காசுக்கும் விதியற்றவராகையால், அவர் அங்குள்ள தோணி இயக்குவோர்களுக்கு இன்சொற் பல உரைத்து, அவர்களுதவியாற் கப்பலேறிச் சென்று துவாரகாபுரியினிற் பிரவேசித்தார். துவாரகையைத் தரிசித்த மாத்திரத்திலேயே, ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டதுபோல் மனமகிழ்ச்சி எய்தி, அந்நகரிலுள்ள வீதிகளின் அலங்காரத்தையும், ஆடவர் பெண்களின் அழகை

யும், கடை வீதி, கோட்டை, கொத்தளங்கள் முதலியவற்றின் சிறப்பையும், அரசர் பலர் நெருங்கப் பெற்ற அரண்மனை வாயிலை யுங் கண்டு களித்து, ஆனந்தபரவசராய் மூன்று கோட்டை வாயில் களையுந் தாண்டி, அநேக ஆயிரம் காவலாளிகள் சூழ்ந்திருந்தும் பகவானது அனுக்கிரஹத்தால் இடையூறின்றி அரண்மனைக்குட் சென்றார். பின் ஸ்ரீகண்ணபிரான் ஸ்ரீருக்குமிணி தேவியொடு கூடிக் குலாவிக்கொண்டிருக்கும் நவரத்தின கசிதமான அறையைச் சமீபித்து தமது வரவை வாயிற்காப்போனுக் குரைக்க,அவன், தரித்திர சிரோமணியான இவ்வேதியர்பால் மிகஇரக்கமுற்று,மன்னர் மன்னனாகிய கண்ணனிடஞ்சென்று அவரது வரவைத்தெரிவித்தான்.

குசேலர் வரவைக் கேள்வி யுற்ற அக்ஷணமே, ஸ்ரீகேசவிந்தன், நவரத்னமயமான சப்பிரகூட மஞ்சத்தினின்று எழுந்து, அதிவேகமாய் ஓடிவந்து, முனிவரைக்கண்டு பலமுறைவணங்கித் துதித்து, ஆலிங்கனஞ்செய்து, ஆனந்தக் கண்ணீர் சொரிய, தேகம் புளகிக்க, அவர்கரத்தைப்பற்றி, அந்தப்புரத்துக் கழைத்துக் கொண்டுபோயினர். போனதும் ஆசனமளித்து, அருக்கிய பாத்திய ஆசமன முதலான வந்தன வழிபாடுகளைச் செய்து, பஞ்ச படச பரமான்னத்துடன் போஜனஞ் செய்வித்து, உத்தமமான சந்தனாதிகளாலும் புஷ்பங்களிலும் அப் பிராமணோத்தமரது திருமேனியை அலங்கரித்து, விபூதி புஷ்பங்களினாலும் துளசி தளங்களாலும அவரை அர்ச்சித்து,தாம்பூலமளித்துப் பஞ்சணையில் எழுந்தருளிவித்து,அவரது திருவடிகளைத் தமது மடியினில் எடுத்துவைத்துக்கொண்டு,நடந்து வந்த இளைப்பாற வருடிக் கொண்டே குசேலரது மனைவி மைந்தர்களின் யோக க்ஷேமங்களை வினவுவா ராயினர்.

(இன்னும வரும்)

சி. நாராயணசாமி ஐயர் B. A. L. T.

விடுகதை வினவுக்கு விடை.

நல்லசிவன் பிள்ளை நயங்கவினு வாமதனுக்(கு)
ஒவ்வு(ம)விடை ஈதுவிவே கோதயமே!—எல்லவரும்
பற்றுவான் அஞ்சலிசெய் பத்மநா பன்வாழ்வாம்
பொற்றிருவ னந்த புரம்.

A .M. தியாகராஜையர்.

கமலாவதி.

அங்கம்—4.

காட்சி—1.

இடம்.—மோஹன அரண்மனையின் முன் கூடம். காலம்.—முற்பகல்.

[மோஹனனும் குணமாலிகையும்
ஆசனத்தில் வீற்றிருக்கிறார்கள்]

குண. அம்மா! நான் சொன்னபடி கொரேசேனனை இங்கு வரும்படி ஏற்பாடு செய்தீர்களா?

மோ. ஆம், செய்தேன். அவன் வருகின்ற சமயந்தான் இப்பொழுது.

குண. அவன் திடீரென்று வந்து விட்டால் என்ன செய்கின்றது? தாதிக்கு எச்சரிக்கை செய்திருக்கின்றீர்களா?

மோ. அதைப் பற்றி உனக்குக் கவலை வேண்டாம். எல்லாம் அவளிடம் சொல்லியிருக்கின்றேன். இனி நீ செய்ய வேண்டியதைச் செய.

குண. அம்மா! நான் சொன்னது ஒவ்வொன்றும ஞாபகத்தில் இருக்கட்டும்! ஜாக்கிரதை!

மோ. அடிக்கடி சொல்ல வேண்டுமா எனக்கு? எல்லாம் தெரியும்.

குண. [ஓர் நிருபத்தை வரைந்து,
மேஜையின்மீது வைத்து.]

அம்மா! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!

மோ. ஸ்! எல்லாம் தெரியும் எனக்கு.

[தாதி பிரவேசிக்கிறாள்.]

தா. அம்மணி! கொரே சேனன் வந்து விட்டார்.

குண. (தாதியை நோக்கி) நான் சொன்னதெல்லாம் ஞாபகமிருக்கின்றதா?

தா. என்ன அம்மா!—அதற்குள் மறந்து விடுவேனா?

குண. இருந்தாலும், நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டுமென்ப

தற்காகச் சொன்னேன். (மோஹனுவை நோக்கி) அம்மா! வாருங்கள். நாம இங்கு மறைவாக இருந்து நடப்பதைக் கவனிப்போம். (தாதியை நோக்கி) சரி நீ போகலாம்.

[தாதி போகிறாள். இருவரும் மறைந்து கொள்ளுகின்றனர். சற்று நேரத்திற்குள், மோஹனுவும், கொரேசேனனும் பிரவேசிக்கிறார்கள்.]

கோ. ராணியவர்கள் எதற்காக என்னைக் காண விரும்புகின்றார்கள்? உனக்குத் தெரியுமா?

தா. தெரியாதே.

கோ. [ஓர் ஆசனத்தின் மீது அமர்ந்து கொண்டு]

சரி. ராணியாரிடம் சென்று, நான் இங்கு வந்திருப்பதாகத் தெரிவி.

தா. உத்தரவு. [போகிறாள்.]

கோ. (தனக்குள்) என்னை எதற்காக ராணியார் காண விரும்புகின்றார்களோ, தெரியவில்லை.

[மேஜை மீதுள்ள நிருபத்தைக்கண்டு.]

இதென்ன நிருபம்? யார் எழுதியது?

[அதை எடுத்துப் பார்க்கிறான்.]

"ஜாக்கிரதை! ஜாக்கிரதை!"

[கலக்கத்துடன் திறந்து படிக்கிறான்.]

"ராணியாரவர்களுக்கு"

கொரேசேனனிடத்தில் தாங்கள் மிகவும ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

[திடுக்கிட்டு]

யார் வரைந்த நிருபம் இது? ராணியாருக்கு நான் செய்த தீங்குகள் எவர்க்கும் தெரியாதென் றிருந்தேனே!

குண். [மோஹனுவை நோக்கி மெதுவாக]

அம்மா பார்த்தீர்களா?

மோ. (திடுக்கிட்டு) ஹா! இதென்ன விந்தை!

குண. அம்மா! கொஞ்சம் பேசாமலிருங்கள். இன்னும் கவனிப்போம்.

கோ. இருக்கட்டும். இன்னும் என்ன வரைந்திருக்கின்றது பார்ப்போம்.

[படிக்கிறான்.]

"தவிரவும், ஸ்ரீதரர் மீது, தங்களைக் கொண்டு பெரும் பழி சுமத்தச் செய்தது கொடூரசேனனே யென்று நான் நன்கறிவேன். இம்மட்டோ? மஹாராஜா அவர்களைக் குத்தி வீழ்த்தி ஜயகேசரியார் மீது பழி சுமத்தியதும் கொடூரசேனனே. ஆகையால் இனி அவன் விஷயத்தில் தாங்கள் மிகவும் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

"நன்மை நாடி"

[நடுக்கத்துடன்]

இதென்ன ஆச்சரியம்! இந்த நன்மைநாடி யாராயிருக்கலாம்?—நான் இதுவரையில் இவர்களுக்குச் செய்து வந்த தீங்குகளெல்லாம், எவருக்கும் தெரிந்திரா தென்றல்லவோ எண்ணி இருந்தேன்.! (சற்றுத்தாமதித்து) சரி இருக்கட்டும் இந்நிருபத்தை ராணியார் இன்னும் பார்த்திருக்க மாட்டார்களென்றே நம்புகின்றேன். போகட்டும். என் விஷயத்தில் இம்மட்டாகிலும் கடவுள் கிருபை செய்தாரே?

மோ. (தனக்குள்) ஹா! ஹா! அடா! பாவி! உன்னை நான் வீணாக நம்பிக் கெட்டேனே!—ஐயோ!

குண. ஸ்! அம்மா! என்னை வேண்டி. இன்னும் சற்றுப் பேசாதிருங்கள்

கோ. அப்பா! என்ன கஷ்டம்! நான் தான் சாமர்த்தியசாலியென்றெண்ணி யிருந்தேன். என்னிலும் சமர்த்தன் ஒருவன் இருந்து வருகின்றான்.

[தாதி மறுபடியும் பிரவேசிக்கிறாள்.]

தா. (கொரேசேனனை நோக்கி) ராணியாரவர்களும, குணமாலிகையும் வருகின்றார்கள்.

[மோஹனாவும், குணமாலிகையும பிரவேசிக்கிறார்கள்.]

மோ. கொரேசேனரே! சில அவசரகாரியங்களிருந்தபடியால், தமமை நெடுநேரம் காக்க வைத்துவிட்டேன். மன்னிக்க வேண்டும்.

கோ உம்—அதனாலென்ன?

மோ. (தாதியை நோக்கி) யாரோ ஒருவன் என்பேருக்கு ஒரு நிருபம் கொடுத்துச் சென்றான் என்றனையே! அவன் யார்? அந் நிருபம் எங்கே?

தா. அம்மணி! அவன் இன்னானென எனக்குத் தெரியாது. "தங்களைத் தவிர வேறொருவரிடத்திலும் கொடுக்கக் கூடாதென்று கண்டிததுக்கூறி, இப்பொழுது தான கொடுத்துச் சென்றான். அதை இம்மேஜையின் மீது நான் வைத்தேன். காணோமே அதை!

[தேடுவதுபோல் அபிநயிக்கிறாள்.]

மோ. என்ன அஜாக்கிரதை! அந் நிருபத்தில் என்ன வரைந்திருந்ததோ? அந்நிருபம் கொடுத்தவன் இன்னானென்றும் தெரியா தென்கின்றாயே!

[சற்றுக் கோபமுள்ளவளைப் போல அபிநயித்து]

சரி இனியாவது ஜாக்கிரதையா யிரு,—தெரியுமா?

தா. அம்மணி! புத்தி!

குண. அம்மா! பசியெடுக்கின்றது. வாருங்கள், நாம் போவோம்.

மோ. அதற்கென்ன போகலாம். சற்றுப் பொறு (கொரேசேனனை நோக்கி) கொரேசேனரே! இன்று தம மனதில் ஏதோ கவலை குடிகொண்டிருப்பது போல இருக்கின்றதே! விஷயமென்ன?

கோ. (முக விகாரத்துடன்) ஒன்றும் இல்லை அம்மணி! அதிருக்கட்டும்—தாங்கள் என்னைப் பார்க்க விரும்பிய விசேஷம் என்ன?ஏதேனும் அவசரமான காரியமாய் இருக்கலாமோ?

மோ. அப்படி அவசர காரிய மொன்று மில்லை.

கோ. அப்படியாயின், இன்று மாலை தங்களை மறுபடியும் சந்திக்

என்றேன். குழந்தையை அழைத்துச் சென்று, போஜனம் செய்து வையுங்கள் முதலில்.

மோ. சரி, அப்படியே.

[கொரேசேனன் போகிறான்.]

குண. நான் சொன்னது உண்மையேயென்று, தங்களுக்கு இப்பொழுதாவது புலப்பட்டதா?

மோ. [குணமாலிகையைத் தழுவிக்கொண்டு]

ஹா! குழந்தாய்! என்னைப்போல் அறிவில்லாப் பாதகி, இவ்வையகத்தில் எவருமில்லை! ஐயோ! பாபி கொரேசேனனது ஸ்வபாவம் இப்படிப்பட்டதென்று, முன்னமேயே அறியாமற் போனேனே!

[விம்மி விம்மி அழுகிறாள்.]

குண அம்மா! அழாதேயுங்கள். போனது போகட்டும். இனியாவது ஜாக்கிரதையாக இருப்போம். மேலே செய்யவேண்டிய காரியங்களை யோசிப்போம். போவோம் வாருங்கள்.

மோ. ஹா! கடவுளே! உலகானுபவம் இல்லாத என் புத்தி என்ன புத்தி! ஐயோ! பாபி! கொரேசேனா! பாதகா!.

[மோஹனையைத் தாங்கிய வண்ணம் குணமாலிகை போகிறாள்.]

(காட்சி முடிகின்றது.)

(இன்னும் வரும்.)

K. வேங்கடராமையர்.

விநோதக் கூற்று.

அந்தகராகிய மாமபழக் கவிச்சிங்க நாவலர், ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரின் பிதா ஸ்ரீமான் பொன்னுசாமித் தேவரால் ஆதரிக்கப் பட்ட புலவருள் ஒருவர். தேவர் இவரை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ஒரு சமயம், இவர் காலந்தாழ்த்து வர, 'ஏன் இவ்வளவு தாமதம்"? என்றனர் தேவர். அதற்குப் புலவர், "என்னை இதுகாறும் பாராச் சேவகர் தடுத்து நின்றமையே தாமதத்திற்குக் காரணம்." என்றார். உடனே தேவர் வெகுண்டு, அச்சேவகர்களைக் கடுமையாகத் தண்டிக்க எழுந்தபோது புலவர், "வேகநதே வெகுளேல். நான் சொன்னதை நன்கு கவனித் தருள்க. என்னை, இதுகாறும் பாராச் சேவகர் தடுத்தது வியப்பன்றே. பார்த்த சேவர்களாயின் தடுத்திருப்பார்களா? ஆகையால் அது அவர்கள் தவறன்று" என்னப் பரிந்து பேச, தேவர், சினம் தணிந்து, அவர்களது பிழையைப் பொறுத்துப் புலவரை வியந்தனர். கமலாலயன்.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

(26-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

கதை—19.

கலைவல்லுநனே கனமிக உறுவன்.

விக்ரமார்க்கன் ராஜ்ய பரிபாலனம் செய்து வரும் நாளில், தேவ சபையில் ரம்பையும் ஊர்வசியும் நிர்த்தனம் செய்தனர். முடிவில் அவர்கள் இருவரது நடனத்திலும் யாரது சிறந்தது என்ற விஷயமாக ஒரு விவாதம் அங்கு உண்டாயிற்று. இதற்கோர் முடிவு கூறத் தேவர்கள் எவராலும் இயலவில்லை. அப்பொழுது, திரிலோக சஞ்சாரியான நாரதர் இந்திரனை நோக்கி, "ஆகண்டல! பூலோகத்தில விக்ரமன் என்ற அரசன் உளன். அவன் சகல கலைகளிலும் நிபுணன். நாட்டியக் கலையிலோ அதிசமர்த்தன். அவனே இதற்கு ஒரு முடிவு கூறத் தக்கவன்." என்றனர். உடனே இந்திரன் விக்ரமனை அழைத்துவர மாதலியை அனுப்பினான். மாதலி கொணர்ந்த விமானத்தேறி விக்ரமாதித்தன் வேதாளத்துடன் தேவசபையாகிய சுதர்மையை அடைந்து, இந்திரனால் நன்கு உபசரிக்கப்பட்டு ஓர் தக்க ஆசனத்து உட்கார்ந்தான். ரம்பை ஊர்வசி நடனம் மறுபடி நடந்தது. விக்ரமன் ஊர்வசியையே புகழ்ந்து,நாட்டிய ரகஸ்யத்தை ஸபையில் உபந்யஸித்து, ஜய மடைந்தவள் அவளே என்பதற்கு ஆதாரமும் யாவரும் ஒப்பக் காட்டினான். வஜ்ரபாணி சந்தோஷித்து, ரத்நமயமானதும், 32-பதுமைகளையுடையதும், அதி மனோகரமானதுமான ஒரு சிம்மாசனம் அவனுக்கு ஈந்தான்.விக்ரமன் அதனை ஏற்று இந்திரனிடம் விடைபெற்று வேதாளத்துடன் உஜ்ஜயனி நகர் அடைந்தான்.

"கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு".

கதை—20.

விதியை யாரால் விலக்கிட லாகும்?

மான் வேட்டையின் பொருட்டு வனத்தில் திரிந்த ஒரு வேடன்,மான்கள் வரும் வழியில் வலை விரித்துச் சென்றான். சின்னாழிகைக்கெல்லாம் அதிவேகமாக ஒரு மான் துள்ளிக் குதித்தோடி அவ்வலையில் அகப்பட்டுக் கொண்டது. ஆயினும் அது விரைவாக வலை முடிச்சுகளைக் கடித்து உதறித் தன்னை விடுவித்துக் கொண்டு ஓடியது.ஓடுங்கால காட்டுத் தீ அதனைச் சூழ்ந்து கொள்ள, அதையும் அது தாண்டித் தப்பியது. பிறகு வழியில் வேடன் ஒருவன் வில்லுடன் வந்து அதை நோக்கி அம்பு தொடுத்தான்.அம்மான் பயந்து அதிவேகத்துடன் ஓடியும் அது வழியிலிருந்த ஒரு ஆழ்ந்த பாழ்ங் கிணற்றில் விழுந்து இறந்தது. ஆ! ஆ!! அதன துரதிர்ஷ்டத்தைப்பாருங்கள். "சாவாரை யாரே தவிர்ப்பார்?"

வி. ஆ. நடராஜன்.

அரசஞ் சண்முகனார் மீது

இ ரங்க ற் பா க் க ள்.

பஃறாழிசைக் கோச்சகக்கலிப்பா.

தரவு

வளமலிசீர் நிறைசோழ வந்தானில் அவதரித்திட்(டு)
இளமையிலே புலமைநிறைந்(து) இசைஎல்லாத் திசையுநிறீஇக்
குலனருள்தெய் வங்கொளகை குறித்தபிற குணமெல்லாம்
இலகுறநல் லாசிரியன் எனுந்தகுதி சிறந்தோங்கி
உரியபொருள் அறமின்பம் உறத்துய்த்தசெவ் வேள்தன்
திருவடிக்கே மாறாத சிந்தைபெறுஞ் சண்முகனே!

தாழிசை.

காப்பொன்றே ஒருநூறு கவின்கொளுரை யொடுவிளக்கப்
பாப்பொலியும் நூ'ரேக பாதம்' நுவல் சண்முகனே!

காலமெலாங் கழித்திடினும் கவிஞர்பலர் காண்கில்லா
"மாலைமாற்(று) எனுந்துறையின் மாலை" பகர் சண்முகனே!

மாதமுறு மாணவர்தம் மறதியெனும் பிணிநீங்க
"அந்தாதித் தொடை நிகண்டை" யளித்தபுகழ்ச் சண்முகனே!

'இன்னிசைசே ரிருநூ'ற்றை யெழிற 'பஞ்ச தந்திரத்'தை
மன்னிசைவெண் பாவளங்கள் மலியமொழி சண்முகனே!

எண்பெருநூ னுலுரையு னியறறிய ஆராய்ச்சிகளை
'நுண்பொருட்கோ வை'யெனவே நுவன்றுவந்த சண்முகனே!

பண்டைச்சங் கப்புலவர் பாலெழும் 'ஆராய்ச்சி யெனுங்
கண்டுநிகர் வசனமுனங் கனிந்தளித்த சண்முகனே!

தமிழ்மணக்கு 'மீனாக்ஷித் தாய்க்குரிய தோத்திர'மாம்
அமிழ்துறழ்சந் தப்பாவை யறை அரசஞ் சண்முகனே!

மண்ணிலுயர் வாணிகர் மற்றில்லாத் திருக்குறட்குச்
"சண்முகன்றன் விருத்தி" யெனச் சாற்றிவந்த சண்முகனே!

உலகர்தமிழ்த் திறம்வியக்கும் ஒரு*நூலி னுரைதொடங்கி
இலகுமதிற் பாயிரத்தை இனிதளித்த சண்முகனே!

---

*தொல்காப்பியம்.

தனிச்சொல்.

எனவாங்கு,

சுரிதகம்.

தமிழ்த்தாய் தனது நன்மணி பொருவும்
மகவினை யிழந்து மற்றுநீ இயற்றிய
வநம்பணி குறித்து வருந்தினள் புலம்ப
யாங்கே யினியோ அம்ம!
திங்கணி புரையுஞ் செந்தமிழ்ப் பேறே!

எழுசீராசிரிய விருத்தம்

கல்வியின் வரம்பு கணித்திடுங் கவிஞர் கற்பனைக் கிலகுறுங்காட்டே!
மல்கிய நூலின் மறையெலாம யார்க்கும் மாசறத் தெரித்திடுமணியே!
ஒல்குமோ நுண்மை யுரைத்திட உற்றார்உறுமொரு நடுநிலையுரவோய்!
வெல்லுமா றினைறு விதியெனு முண்மை விளக்கியருளவகுறித்தனையே!

கோச்சகக் கலிப்பா.

அருமைதரும் பொருள்மயங்கி அறிஞர்மலைந் திடக்காணிற்
பெருமைதரும் இனியமொழி பிறங்கிடஉண் மைப்பொருளைத்
தரும்புலமைச் சண்முகன்றன் றனிமொழியென் றுளகிருக்கும்
இருநிலமுந் தமிழ்த்தாயு மென்படுமோ நினைத் தனைந்தே!

அறுசீராசிரிய விருத்தம்

நின்னனையான் பண்டொருவன் அரன் கவிக்குப் பழுதுரைத்து நேர்வெல்லாத
அன்னவன்றன் அனல்விழிக்கே அஞ்சினன் எனுங்குறையை அகற்ற வுன்னித்
தன்னெறிடிலக் கனவமைதி சாற்றுகென்ச சண்முகனே! சார்ந்தாய் கொல்லோ?
என்மையதே யப்போல் தருடியவா என்றிங்குன் னன்று வாயே.

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கக் காரியதரிசி
R. வேங்கடாசலம்.

சமாசாரக் கொத்து.

மதுரைத் தமிழ்ச்சங்கக் கலாசாலையிற் பயிலும் மாணவர்களுக்கு மாதக் கணக்காய்ச் சம்பளம் போடாதது மிக விசனிக்கத்தக்கதே. டிசம்பர் மீ முதல் அவர்களுக்கு உண்டிக்காகக் கொடுபடும் சம்பளம் கொடுபட்டதாகத் தெரியவில்லை. யாவராலும் அநாதரவு செய்யப்பட்ட தமிழை விரும்பிக் கற்கவே, தொலை தூரத்தில் உள்ள வேற்றூர்களிலிருந்து உற்றோர் பெற்றோரைப் பிரிந்து வந்துள்ள மாணவர்கள் படும் திண்டாட்டம் சொல்லி முடியாது. இச்சங்க சம்பந்தமான குறைகள் பலவுள. அவற்றை அடுத்த சஞ்சிகையில் "தமிழ்ச் சங்கத்தார் கவனித்துத் தீரக் கடமைப் பட்டவை" என்ற தலைப்பின்கீழ் எழுதுவோம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கம்.—இச்சங்கத்தின் பதினொராவது வருஷ பூர்த்தி சம்பந்தமாகத் திருநெல்வேலிப் பிரதிநிதிகள் இங்கு வந்த விஷயம் முதலியன சென்ற சஞ்சிகையில் குறிப்பிட்டோம். நாம் அதிற் கூறியபடியே, மார்ச் மீ 24வ யன்று நெல்லைவாசிகளின் பொது ஜனப் பெருங்கூட்டம் ஒன்று ஸ்ரீ காந்திமதி அம்மன் ஊஞ்சல் மண்டபத்திற் கூடியது. ஸ்ரீ: எஸ். ஞானசிகாமணி முதலியார், பீ.ஏ. "தமிழ்" விஷயமாக ஒரு திவ்யப் பிரஸங்கமும், ஸ்ரீ எம். வி. நெல்லையப்பிள்ளை பி. ஏ "ஒற்றுமை, சம்பந்தமாக ஒரு மகோபந்யாசமும் புரிந்ததும், இச்சங்க வருஷோத்ஸவத்தை இனிது நிறைவேற்றப் பின் வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன:—(1) 25-பேர்களடங்கிய ஓர் நிர்வாகசபை நியமிக்கப்பட்டது. இதற்குத் தலைவராக இருக்க ஸ்ரீ டி. பி. கிருஷ்ணசாமி முதலியார் எம். ஏ, பி. எல். ஒப்புக்கொண்டிருக்கின்றனர். (2) எட்டயபுரம் இளைய ஜமீந்தாராகிய ஸ்ரீ: தங்கசாமி பாண்டியன் அவர்கள், குருவிக்குளம் ஜமீந்தார் ஸ்ரீ: குர்தளசாமி நாயுடு காரு, ஸ்ரீ: டாக்டர் அப்பாவு பிள்ளை முதலிய 150-பேர்கள் கொண்ட "வரவேற்பு சபை" ஒன்று தெரிந்தெடுக்கப்பட்டது. இச்சபைக்கு முதற் கூறியவர் அக்கிராசனரும், பிற்கூறிய இருவரும் உபாக்ராஸநாதிபதிகளுமாகத் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். (3) ஸ்ரீமான்களாகிய டி. எஸ். இராமநாதையர் பி. ஏ, எல். டி. வீரபத்திரபிள்ளை, பி. எஸ் சீதாராமபிள்ளை, எம். கிருஷ்ணராவ், பி. எஸ். சண்முகம்பிள்ளை அவர்கள் ஆகிய ஐவரும் காரியதரிசிகளாகத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளார்கள். ஸ்ரீ மான்களாகிய ஆர். சிவஞானம் பிள்ளை பி. ஏ. யும், டி. ஆர். கள்ளபிரான் பிள்ளை பீ. ஏ. பி. எல்; லும், நிதித்தலைவராக நியமனமாயினர் (6) ஸ்ரீ: கே. வி. வீராகவையர் எம். ஏ. எல். டி.யும் பி.சுப்பிராயலு நாயுடு காருவும் காப்டின்களாகத் தெரிந்தெடுக்கப்பட்டனர். (6) ராயவாஹுப் தோட்டக்கார ராமகிருஷ்ண பிள்ளை பி. ஏ. எப். ஆர். ஏச. எஸ் வருஷோத்ஸவ காலங்களில் அக்ராஸநாதிபதியாக இருக்குமாறு தெரிந்தெடுக்கப் பட்டிருக்கின்றனர். (7) உதவிக் காப்டன்களாக ஒன்பது பேர்களும் பிராமண வாலண்டீர்கள் இருவரும், கிருஸ்தவ வாலண்டீர்கள் இருவரும், நியமிக்கப்பட்டிருக்கின்றனர். (8) இச்சங்க வருஷோத்ஸவம் நெல்லை வாசிகளின் சௌகரியத்திற் கிணங்க மே மீ 18,19,20,21 உகளில் நடத்தத் தீர்மானமாயிற்று. இத்தீர்மானங்கள் இச்சங்க அக்ராஸநாதிபதிக்கு அறிவிக்கப்பட்டன. அவரும் அத்தேதிகளே தம் சங்க வருஷோத்ஸவத்திற்கு முற்றும் பொருந்திய சுபதினங்கள் என நெல்லை வாசிகளுக்கு அறிவித்து விட்டனர். இவ்வருஷோத்ஸவ சம்பந்தமான பிற விஷயங்கள் நமக்குக் கிடைத்தவுடன் வழக்கப்படி அறிவிப்போம். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

மீகச் சிறு மனுஷி:—ஹாலண்டில் ஒன்றரை அடியே உயரமுள்ள ஒருத்தி இருக்கிறாள். அவளுக்கு வயது 16. இரண்டரை வீசை நிறையுள்ளவளாம். நான்கு பாஷைகளை பேசுகிறாளாம்.

முதல் தரக் காலேஜாக இனி ஆகும் மதுரைக்காலேஜுக்கு நிலம் வாங்க துரைத்தனத்தார் 21,609 ரூபாய் தர முன் வந்திருக்கிறார்கள். காலேஜிலிருந்து 21,609 ரூபாய் இந்நிலத்திற்குக் கொடுபடும் என்றும், கட்டிடவேலை சீக்கிரம் தொடங்குமென்றும் எதிர்பார்க்கிறோம்.

பிழை திருத்தம்:—குட்டிவொட்டி என்ற அழகிய சல்லாப செந்தமிழ்க் கலாசபை வருஷோத்ஸவ நிகழ்ச்சி விஷயமாகச சென்ற சஞ்சிகையில் நாம் சொல்லி வந்தபோது கே. வேங்கடராமையர் 8 ரூபாய் அச்சுவகக் கட்டிட சம்பந்தமாக தர ஒப்புக்கொண்டார் என்றோம். அது தவறு. ஒரே ரூபாய் அவர் தருவதாக ஒப்புக்கொண்டது. ஸ்ரீ பீ. ஆர் ஐயாசாமிஐயர் பீ. ஏ. தான் 8-ரூபாய் தர ஒப்புக்கொண்டது. இதைகூற மறந்தோம்.

பத்திராதிபர்.

குறைந்த சந்தா! ஆர்டருக்கு முந்துங்கள்!!

1916ௗ நவம்பர் மாதம் முதல் வெளிவருவது.

கற்பகம்.

இது தமிழ்ப் பாஷையைப் பரவச் செய்து பொது ஜனங்களின்

க்ஷேமத்திற்காக உழைக்கும்

ஓர் இனிய செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா தபால் சார்ஜ் உட்பட

உள் நாட்டிற்கு 0—12—0 வெளி நாட்டிற்கு 1—0—0

இதில் வித்யா விஷயம், கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், வைத்யம், விவசாயம், வியாபாரம், கைத்தொழில், வேதாந்தம் இராஜாங்க விஷயம், ஜனங்க சீர்திருத்தம், இராஜ பக்தி, நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்கள் வித்வத்சிரோமணிகளால் எழுதப்பட்டு வெளி வருவது.

ஒவ்வொருவரும் தங்கள் தங்களால் இயன்றவரையில சந்தாதாரர்களை சேர்த்துக்கொடுத்து நம பத்திரிகையை ஆதரிக்குமாறு வேண்டுகின்றனம்.

N. B. பத்து சந்தாதாரர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷப் பத்திரிகை இனாம்

மானேஜர்.

"கற்பகம்." புதுவை.

இந்தியாவில் மிகப்பெரிதும் பழமையுமான வைத்தியசாலை எது?

1881-ஆம் ஜார் நகரில் ஸ்தாபிக்கப்பட்ட

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்.

குழந்தைகளுக்கு சகலரோகங்களையும் குணப்படுத்தும

சஞ்சீவி

பாலமித்ர

300மாத்திரை

கொண்ட டப்பி

1-க்கு ரூபா 1.

வியாதியைப்பற்றி விபரமாய்தெரிவிப்போர்களுக்கு நன்றாய் ஆலோசனைசெய்து திருப்தியான விடை கொடுக்கிறோம்.

கடிதங்களுக்கு உடனே பதில் எழுதப்படும்

இந்த

ஔஷதாலயத்தில் விருத்த வைத்திய பாரங்கதரும், வித்தியா பட்டம்பெற்ற மேதாவிகளும், சாஸ்திர சம்பன்னர்களும் திறமை வாய்ந்த அதிகாரிகளுமாக நூற்றுக்கணக்கான ஜனங்கள் உத்தியோகம்செய்கிறார்கள்

முதன்மையான

மருந்து சென்ற35 வருஷகாலமாகப் உபயோகிப் போருக்கு அற்புத குணத்தைக் கொடுத்து தேகபலத்தையும மனோவனமையும் கொடுத்து பெருமபுகழ் படைத்திருக்கிற ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள

32 மாத்திரையின் விலை ரூ 1.

வைத்திய சாஸ்திரி
மணிசங்கர் கோவிந்தஜீ
ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்
45, மேலக் கோபுர வீதி,
மதுரை.

இருமல், கபம்

காசம்இவைகளுக்குசிறந்தமருந்து

காசாந்தக

மாத்திரைகள் டப்பிக்குவிலை ரூ 1

இதுவரை எங்கள்கேட்லாக்கை

பார்த்திராவிடில்

உடனே உங்கள்

விலாசத்தைஎழுதுங்கள். எவ்வித

செலவில்லாமலும் இனமாய் அனுப்புகிறேம்.

ஞானகாந்தி.

குசாவதி | மூன்று இனிய தமிழ் நாவல்கள் | காதலி?

இவற்றின் அருமை பெருமைகள் தமிழ்நாடு முழுதும் அறியும். ஒவ்வொன்றின் விலை அணா—12

அன்பானந்தன் | சந்திரசேகரி

இவை இரண்டும் அன்பின் உயர்வையும், காதலின் இன்ப துன்பங்களையும். உலகத்தில் உள்ள போலி வேஷங்கள் பலவற்றையும், விளங்கக் காட்டி மனத்திற் பதித்து அறிவைத் திருத்துவன. இனிய நடையில் நவரசங்களும் பொருந்த எழுதப் பெற்றுள்ளன:—ஒவ்வொன்றின் விலை ரூ 1—0—0. கிடைக்குமிடம் 'ராஜேந்திர விலாஸ்' வால்டாக்ஸ் ரோட், சென்னை

முந்துங்கள்! முந்துங்கள்!! முந்துங்கள்!!!

சிவகங்கை ஸம்ஸ்தான வித்வானாக இருந்து காலஞ்சென்ற பிரமஸ்ரீ வில்லியப்பப் பிள்ளை முன் இயற்றி வெளியிட்டதும், உலக ரகஸ்யம் அறிய விரும்பும யாவரும் அதி ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருப்பதுமான

பஞ்ச லக்ஷணத் திருமுக விலாஸமும்

அச்சிடாத அவரது விநோத கவிகளும்.

இவ்விரண்டும் ஒரே புத்தகமாக அநேகரது முக்கிய வேண்டுகோட் கிணங்கியே, இப்பொழுது அச்சாகி அதி சீக்கிரம் வெளிவரும். இது வெளிவந்தவுடன தமக்கு அனுப்புமாறு இப்பொழுதே ஆர்டர் கொடுப்போர்க்கு மட்டும் ரூ 1க்குக் கொடுபடும். பிறாக்கு அதன் விலை ரூ 1–8–0 ஆகும். சொற்பப் பிரதிகளே வெளிவரும். ஆதலால் இந்நூல வேண்டுவோர் காலதாமதமின்றித் தமக்கு வேண்டிய பிரதிகளைக் குறித்து அடியிற் கண்டவர்க்கு எழுதுக.

வி. காசி விசுவநாத பிள்ளை,
"விவேகோதயம்" ஆபீசு, மதுரை.

கந்தபுராணம்

மூலமும் உரையும்.

ஸ்ரீ கச்சியப்ப சிவாசாரியாரால் அருளிச்செய்யப் பெற்ற கந்த புராணம் செய்யுள் 10846 அடங்கிய ஆறு காண்டங்களுக்கும் "கலாபூஷண" மென்னும் மிக்க அருமைவாய்ந்த உரையெழுதி, நல்ல கடிதத்தில் அச்சிட்டு, அனேக சித்திரப்படங்கள் சேர்த்து 2-புத்தகமாக உயர்ந்த கலிகோபயிண்டு செய்துள்ளது. செட்டு-1-க்கு விலை ரூ 10—0—9

வி. பி. செலவு ரூ 1—0—0

61-வருஷ பஞ்சாங்கம்.

இது இங்கிலீஷ் 1854௵ (முன் ஆனந்த) முதல் 1915-௵(சென்ற ஆனந்த௵) வரையிலுமுள்ள பழைய பஞ்சாங்கங்களை யெல்லாம் வாங்கி முறையாகத் தொகுத்து ஆண்டு, மாதம், தேதி, வாரம், திதி, நக்ஷத்திரம், யோகம், கரணம், பாதசாரம், முதலிய சகல அங்கங்களுடன் அனேக ஜோதிஷப் பொது விஷயங்களையுஞ் சேர்த்து நன்றாய் அச்சிட்டு வெகு அழகான கலிகோ கிலிட் பயிண்டு செய்துள்ளது.

இப்பஞ்சாங்கத்தின் பிரயோசனத்தை சர்வத்தராலும் எதிர்பார்க்கக் கூடுமாகையால் படித்த வகுப்பாரனைவோர்களும் ஒவ்வொரு புத்தகம் வாங்க வேண்டுவ தவசியம். சொற்பப் புத்தகங்கள் தான் கைவசமிருக்கின்றன.

விலை ரூ 5—0—0.

வி. பி. செலவு ரூ 0—8—0

வானசேகர சத்தகோள தீபம்

(அரிய ஜோதிட நூல்.)

இது மிக்க அருமை வாய்ந்ததும் பல பாகங்களை அனேக மேற்கோட்களுடன் விளக்கிக் காட்டும் அரும் பெருஞ் சோதிட சாஸ்திரமுமாகும்.

விலை ரூ 1—8—0.

குறிப்பு:—இன்னும் சகலமான புத்தகங்களும் நமது புத்தக சாலையில் விலை சகாயமாய்க் கிடைக்கும். காட்லாக்குக்கு எழுதுங்கள்.

ஜோதிட சாஸ்திரி

S. கூடலிங்கம் பிள்ளை,

"புத்தகசாலை", மதுரை

ஸ்ரீ கிருஷ்ண விலாஸம பிரஸ், திருமங்கலம்.